# Eastern University, Sri Lanka
# Faculty of Commerce and Management
# (External Degree)
# Part I Examination in B. Econ 2008/09
# (Proper/Repeat) March/April 2011
# EXE 2054 Advanced Macro Economic Theory

LIBRARY
30 DEC 2011
Eastern University, Sri Lanka

எல்லா வினாக்களுக்கும் விடைதருக. நேரம்: 03மணித்தியாலம்

---

(1) (a) பழம் பொருளியலாளரது பேரினப் பொருளியல் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

(b) 1930 களில் அக்கோட்பாடு கடுமையாக விமர்சிக்கப்பட்டது ஏன்? விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(2). (a). மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றின் கருதுகோள் ரீதியான தரவுகள் கீழே தரப்படுகின்றன.

சேமிப்பு தொழிற்பாடு, $S = -30 + 1/4y$
முதலீட்டுச் செலவு, $I = 20$ மில்.
அரசாங்கச் செலவீடு $G = 30$ மில்.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(I). சமநிலை வருமானமட்டத்தைக் காண்க.

(II). இப்பொருளாதாரத்தில் மேற்படி சமநிலை மட்டத்தில் $S = I + G$ என்பதனைக் கணித்துத் தருக.

(III). இப்போது அரசாங்கம் 30 மில்லியன் என்றளவுக்கு வரி விதிப்பினைச் செய்கிறது. புதிய சமநிலை வருமான மட்டம் யாது?

(12 புள்ளிகள்)

(b). அரசாங்க செலவுப் பெருக்கியையும் வரிப் பெருக்கியையும் வேறுபடுத்தி விளக்குக.

(04 புள்ளிகள்)

(c)" எல்லை நுகர்வு நாட்டமானது (MPC) எப்பெறுமதியைக் கொண்டிருந்தாலும், சமநிலை வரவு செலவுத்திட்டப் பெருக்கியானது எப்போதும் 1 என்ற பெறுமதியையே கொண்டிருக்கும்" சமன்பாட்டின் மூலம் இக்கூற்றை நிறுவுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(3). (a). நுகர்வுத் தொழிற்பாட்டுக் கோட்பாடுகளில் நிரந்தர வருமானக் கோட்பாட்டை வரைபடத்துடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

(b). நுகர்வுத் தொழிற்பாடு தொடர்பான வாழ்க்கை வட்டக் கருதுகோள் (Life Cycle Theory) எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமானது? சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(4) (a) பணத்தின் கொடுக்கல் வாங்கல் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளை சுருக்கமாக தருக?

(04 புள்ளிகள்)

(b) கேள்வித்தூண்டற் பணவீக்கத்தினை வீக்க இடைவெளி வரைபடத்துடன் விளக்குக.

(04 புள்ளிகள்)

(c). பணநிரம்பலை வரையறுத்துக் கூறும் வெவ்வேறு அணுகுமுறைகளை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

(d). ஒரு நாட்டின் பணநிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளை எடுத்துக் கூறுக.

(04 புள்ளிகள்)

(e) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கங்கள் ஏன் முன்னுரிமை வழங்குகின்றன?

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(5) (a). முதலீடு என்ற பதத்திற்கான பொருளியல்சார் விளக்கத்தை தருக? அதன் பொருளாதார முக்கியத்துவம் யாது?

(04 புள்ளிகள்)

(b). ஒரு நாட்டின் சென்மதி நிலுவைக் கணக்கின் பிரதான அம்சங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(08 புள்ளிகள்)

(c). "பேரினப் பொருளியல் கொள்கை இலக்குக்களை ஒரே சமயத்தில் அடைந்து கொள்வது சாத்தியமில்லை" உதாரணங்கள் மூலம் இக் கூற்றினை விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$